
# பிரியமான பலிகள்

## (Acceptable Sacrifices)



**ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.**

**– 1 பேதுரு 2:5**

இப்புத்தகம், பாஸ்டரல் பைபில் இன்ஸ்டிட்யூட்டரால்
**(Pastoral Bible Institute)** வெளியிடப்பட்ட,

**"Acceptable Sacrifies"**

என்ற ஆங்கிலப் புத்தகத்தின் தமிழாக்கமாகும். இதனை தமிழில் வெளியிட பொருளாதார உதவி செய்த **"Pastoral Bible Institute"** சகோதரர்களுக்கு, எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


வேத மாணவ ஐக்கிய சபை
17-E, நாராயணசாமி கவுண்டர் லே அவுட்
இரத்தினபுரி,
கோயம்பத்தூர் 641 018.

# பிரியமான பலிகள்
## (Acceptable Sacrifices)

**ஜீவனுள்ள கற்களைப்போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச் செலுத்தும்படிக்குப் பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டுவருகிறீர்கள்.**

**– 1 பேதுரு 2:5**

இந்தப்புத்தகம், பாவ நிவாரண பலிகளைக் குறித்து வேத வசனங்களில் சொல்லப்பட்ட, மூன்று பகுதிகளாலான ஆராய்ச்சியாகும். இதைக் குறித்த வேறுசில கருத்துக்களும் நிலவுகின்றன. ஆகவே வேத வசனம் கூறும் உண்மைக் கருத்துகளோடு மாறுபடுகின்றவர்கள், தங்கள் மன ஐயப்பாட்டைப் போக்கிக்கொள்ள வேண்டும் என்ற நோக்கில், இவைகளை அன்போடு முன்வைக்கிறோம். (1 கொரி 13:8,9)

## அத்தியாயம் 1

## சரியான போதனைகளும், தெளிவான விளக்கங்களும்
## (Plain Teachings and Interpretations)

இப்பாடத்தின் ஆரம்ப கட்டமாக, வேதவசனங்களை சத்தியத்தின்படி போதிப்பதற்கும், வேதவசனங்களுக்குத் தாங்களாகவே பொருள் கொள்வதற்கும் உள்ள வித்தியாசங்களைக் காண்போம். உதாரணமாக வேதம் போதிக்கின்ற வார்த்தையான ஈடுபலி (The Ransom) என்பதை எடுத்துக் கொள்வோம். இயேசு கிறிஸ்து எல்லோருக்காகவும் தன்னையே ஈடு பலியாக ஒப்புக்கொடுத்தார் என்பது மிகவும் தெளிவான உண்மை. இதைக்குறித்து பவுல் 1தீமோ 2:5,6 ல் எழுதியிருக்கிற கருத்துக்கள் மறுக்க முடியாததும், விவாதம் செய்ய அவசியமற்றதுமாகிறது.

ஆனால் வேறு சில காரியங்கள் தெளிவற்றிருக்கிறபடியால் இவைகளுக்கு நிச்சயமாய் விளக்கம் தேவைப்படுகிறது. இதற்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். இயேசுகிறிஸ்து இப்பூமிக்கு வருமுன்னரே தமது மனித ஜீவியத்தில் நிகழக்கூடிய சம்பவங்களையும், மரணத்தையும் குறித்து விளக்கமாக முன்கூட்டியே அறிந்து ஆயத்தப் பட்டிருந்தாரா? அல்லது, தன்னை தியாக மரணத்துக்கு ஒப்புக்கொடுக்க வேண்டியது தமக்கென நியமிக்கப்பட்ட தேவ நோக்கம் என்பதைச் சாதாரணமாக அறிந்திருந்தாரா? இக்கேள்விகளுக்கு வேத வசனங்களி லிருந்து பதில் கொடுப்பது எளிதானதல்ல, ஒரு வேளை ஞானமான செயலுமல்ல. இது போன்ற காரியங்களில், கிறிஸ்தவர்கள் வேத வசனங்களிலிருந்து தாங்கள் பெற்றிருக்கிற சிற்றறிவைக் கொண்டும், சொந்த ஞானத்தின் மூலமும் தாங்களாகவே முடிவெடுக்கக்கூடிய சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள்.

வேத வசனங்களின்மேல் ஏதோ நமக்குப் புலப்பட்ட அர்த்தங்களை மற்றவர்கள் மேல் திணிக்கக்கூடாது. உதாரணத்திற்கு, பழைய கிறிஸ்தவ ஆலய வரலாற்றில் நிகழ்ந்த,

" .....தன் உடன் வேலையாட்களை அடிக்கத் தொடங்கினர்" -மத் 24:49 என்ற வசனத்தின் இப்பகுதியில், எவ்வித கருகலான ஆவிக்குரிய பொருளுமில்லாமல், சாதாரண நடையில் சொல்லப்பட்ட போதிலும் இதன் பொருளை நிராகரிக்கும் உரிமை நமக்குக் கொடுக்கப்படவில்லை.

“சத்தியம் தரும் பலமே ஒருவனைப் பரிசுத்தப்படுத்தும்” (யோவான் 17:17).

எல்லாவற்றிலும் வல்லமையுள்ள தேவன், அவருடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்ளாமல், குருடராயிருக்கிறவர்களின் கண்களை உடனே திறக்கிறவராய் இருக்கிறார். நமக்குள்ளே கருத்து வேறுபாடுகள் நிலவுமானால், தான் சொன்ன கருத்தே சரி என்று மிகவும் பிடிவாதமுள்ளவர் அல்லது அச்ச உணர்வு உள்ளவர் வழியாகத்தான் இம்மாதிரித் தவறுகள் நடக்க வாய்ப்புள்ளது. அவர்கள் அந்தத்தவறை வேண்டுமென்றே செய்யவில்லை என்பதனை அடிப்படையாகக் கொண்டு, ஒருவருக் கொருவர் கருணை காட்டி அரவணைத்துச் சொல்லுபோது, தங்கள் தவறுகளைத் திருத்திக்கொள்ள வாய்ப்புண்டு. வேதத்தின் ஒவ்வொரு பகுதியைப் படிக்கும்போதும், தாம் படித்து ஏற்றுக்கொண்ட கருத்துக்கள், வேத சத்தியங்களின் அடிப்படையில் உள்ளதா? அல்லது சுய தோற்றமான பொருளை உடையதா என்பதைத் தெளிவாக்கிக்கொள்ள வேண்டும். – 2பேது 1:20.

தேவ ஆவியின் ஏவுதலால் நிருபங்களை எழுதிய அப்போஸ்தலர்கள் தவிர மற்ற எந்த ஆசிரியரும், வசனங்களால் நிரூபிக்கப்பட்ட போதனைகளுக்கும், அர்த்தங்கள் மூலமாக நிலைநிறுத்தப் பட்டவைகளுக்கும், உள்ள வித்தியாசங்களை விளக்க வேண்டும். ஏனெனில் ஆசிரியர், மாணவர் இருவரும் குறைந்த அளவு அறிவினைப் பெற்றிருப்பதால் இரண்டு வகுப்பாரிடமிருந்தும் ஆபத்துக்கள் வரலாம். வசனங்களுக்கு அர்த்தம் சொல்வதில் விசேஷமான ஆபத்துக்கள் வரும். ஏனெனில் தேவன் ஏற்ற வேளையில் மாணவர், ஆசிரியர் இருவரின் ஐயப்பாடுகளையும், தெளிவாக்க வழிகாட்டாதவரையில் தவறே இல்லாத அர்த்தங்கொள்வது மிகவும் கடினமாகும்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஒருகாலம் வருகிறது. அக்காலத்தில் தேவன் நம்முடைய பாதைகளை வெளிச்சமாக்கும்போது,

> „அந்த வெளிச்சத்தின் வழியில் நடக்கும் மனிதன் பேதையாக இருந்தாலும், திசைகெட்டுப்போவதில்லை ” – ஏசா 35:8.

இந்தக்காலங்கள் இன்னும் வராததால், நாம் ஒருவரோடொருவர் பொறுமையைக் கடைப்பிடிப்பதே நல்லது.

## தேவனால் கொடுக்கப்பட்ட ஒரு படம்

தேவன் நம்முடைய தற்கால நிலைகளை, வனாந்தரத்தில் அமைக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தின் மூலம், சித்திர விளக்கமாகக்

காண்பிக்கின்றார். அதன் மேல் மூடப்பட்டிருந்த அமைப்பு முறைகள், வெளியிலிருந்து உள்ளே வெளிச்சம் வராதபடி தடுக்கப்பட்டிருந்தது. அதன் உள்ளே செல்லுகின்றவர்கள், அதனுள்ளே இருக்கும் வெளிச்சத்தை மட்டுமே நம்பியிருக்கவேண்டும். இந்த அமைப்புமுறை கிறிஸ்துவைப் பின் பற்றுகிறவர்களுக்கும் பொருந்தும்.

> "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன், இயேசு கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத்தோன்றப்பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார்" – 2கொரி 4:6

**நாம் பலவீனமானவர்கள்**

"தேவனால் கொடுக்கப்பட்ட இவ்வசனங்கள் நமக்குப் போதனையாக எழுதப் பட்டிருக்கிறது" – ரோம 15:4.

> " நாம் இவ்வுலகின் ஞானிகளல்ல " –1கொரி 1:26.

ஆனால், தேவன் நமக்கு அவருடைய ஆவியினால் காரியங்களை வெளிப்படுத்துகின்றார் என்பதை கடந்த கால வரலாறும், அனுபவமும் போதிக்கிறது – 1கொரி 2:9,10.

> "தேவனே உமக்குக் காத்திருக்கிறவர்களுக்கு நீர் செய்பவைகளை, நீரேயல்லாமல் உலகத்தோற்றம் முதற்கொண்டு ஒருவரும் கேட்டதுமில்லை, செவியால் உணர்ந்ததுமில்லை, அவைகளைக்கண்டதுமில்லை " – ஏசா 64:4

> "அவரை அறிந்து கொள்வதால் நித்தியஜீவன் கிடைக்கும்"– யோவா 17:3.

ஒருவருடைய கருத்துக்கள் சரியாகவோ, தவறாகவோ இருக்கலாம் என்ற போதிலும், நண்பர்களையும், சகோதரர்களையும் தேவ வார்த்தைகளைத் தொடர்ந்து ஆராயத்தூண்டுகிறோம். ஆசரிப்புக் கூடாரத்தை மூடியுள்ளவைகளின் கீழ் உள்ள அதிசயங்களை தேவன் வெளிப்படுத்து கின்றார். அவர்மேல் வைத்திருக்கிற அன்பையும், அவரை அறிந்து கொள்ளவேண்டும் என்ற நமது ஆவலையும் முற்றிலும் அங்கீகரிக்கின்றார்.

பொதுவாக, பலவிதமான பாடங்களில் ஒன்றான, பாவ நிவாரண பலி என்ற பாடத்தைப்பற்றிய அறிவு குறைவாகவேயுள்ளது. அநேகர் இதனைக் குறித்த சத்திய போதனைகளில் நம்மிடமிருந்து வேறுபடுகிறார்கள். ஆனால்

ஏற்ற வேளையில் தேவன் தம் திட்டங்களையும் சத்தியங்களையும் வெளிப்படுத்துவார் என்று வேத வசனங்கள் சொல்லுகிறது. நமது மாபெரும் போதகர் தனது மாணவர் அனைவருக்கும், ஒரே அளவில் காரியங்களை வெளிப்படுத்துகிறார் என்பது தவறு. நம்மில் ஒவ்வொருவருக்கும் வேத விளக்கங்களை எந்தஅளவு புரிந்து, ஏற்றுக்கொள்ளும் திறனுள்ளதோ, அந்தஅளவு அறிவை தேவன் பகிர்ந்தளிக்கிறார்.

**பகுத்தறிவோடு அவரை அனுகுதல்**
**(Reasoning with him)**

சில பாடங்களை அனுகும்போது, அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியம். அவர் நமக்குப் போதிப்பார் என்றால் நாம் காண்கின்றபடி,

> "நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமைகளையும் நிர்மூலமாக்கி எந்த எண்ணத்தையும், கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிய சிறைப்படுத்து கிறவர்களாயிருக்கிறோம்" – 2கொரி 10:5

இந்த மேலான, அதிர்ச்சியோடு கூடிய அழைப்பை ஏற்றுக்கொள்வோம். வாருங்கள் வழக்காடுவோம் (காரண காரியங்களை அலசிப்பார்ப்போம்) என்கிறார் – ஏசா 1:18. எதோடு சம்பந்தப்படுத்தி இவ்வாக்கியம் சொல்லப்பட்டுள்ளது? இரத்தாம்பரம் போல சிவந்திருந்த பாவங்கள் பஞ்சைப்போல வெண்மையாக்கப்படும் வரையில் அவரோடு கூட காரண காரியங்களை அலசிப் பார்ப்பது தொடர்பாகவே அவ்வசனம் குறிப்பிடுகிறது. நாம் வழக்காடுவது பயனற்றது என்று உணரும்போது, மிகவும் தாழ்மையுடன் அவருடைய பிரசன்னத்தின் முன் தலை வணங்குகிறோம். அப்போஸ்தலருக்கும் கூட தாழ்மை மிகவும் அவசியமா யிருந்தது.

> "பரிசுத்தவான்களெல்லாரிலும் சிறியவனாகிய நான், கிறிஸ்துவினு டைய அளவற்ற ஐசுவரியத்தைப் புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கிறதற்காக, இயேசுகிறிஸ்துவைக்கொண்டு எல்லாவற் றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே, ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று எல்லோருக்கும் வெளிப்படையாகக் காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" – எபேசி 3:8,9,11.

## கிறிஸ்துவே மையம்

நாம் ஆராய்ச்சி செய்வதால், தேவனுடைய திட்டத்தில் கிறிஸ்துவுக்கு உண்டான முக்கியத்துவம் குறைவாக மதிப்பிடப்படுமா? அப்படி என்றால் நம் எண்ணம் தவறானதாகும். எந்த வசனங்களைப் படித்து சிந்திக்கும்போதும், நாம் நம் சொந்தக் கருத்துக்களை ஒரு போதும் திணிக்கக் கூடாது. வேதவசனங்களுக்கு நாம் கண்டுபிடிக்கும் விளக்கங்கள் ஒவ்வொன்றும் தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படி இருக்க வேண்டும் – எபேசி 3:9.

இவ்வசனத்தில், தேவனுடைய அநாதி தீர்மானம் லோகோஸைக் கொண்டு தீர்மானிக்கப்படவில்லை என்பதைக் கவனிக்க வேண்டும். மனிதனான கிறிஸ்து இயேசு இப்பூமியில் வரும் முன் லோகோஸாக இருந்தார். இந்த லோகோஸைக் குறித்த அடையாளம் எப்போதும் ஒரே மாதிரியாக இருக்கிறது என்பது நமக்குத்தெரியும். இந்த வசனம் என்ன பொருளைத் தருகிறது?

தேவனுடைய ஒருங்கிணைக்கும் திட்டமானது, லோகோஸ் தன் பிதாவோடு இருந்த மகிமையைவிட்டு, மனித நிலையில் கிறிஸ்து இயேசுவாக வந்ததில் அடங்கியிருக்கிறது – எபி 2:14-16 என்ற கருத்தை வெளிப்படுத்துகிறது என்பதை நம்புகின்றோம்.

கிறிஸ்து என்பதற்கு அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்பது பொருள். இயேசு பரலோகத்தில் அபிஷேகம் பண்ணப்படாமல், பூமியில் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

> “கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.” – பிலி 2:5-8.

இந்த உலகத்தோற்றத்துக்கு முன்பே தேவன் ஒவ்வொரு யுகத்திலும் நடக்கவிருக்கின்ற தம்முடைய திட்டத்தை முன்னேற்பாடு செய்திருந்தார் வெளி 13:8; 1 பேது 1:20. அத்திட்டத்தின்படி ஒவ்வொரு யுகத்தின் முக்கிய அம்சங்களும் கிறிஸ்துவையே மையமாகக் கொண்டிருந்தது – எபே 1:9,10.

இந்த ஞானமானது மனித அறிவுக்கு அப்பாற்பட்டதாய் இருக்கிறது.

தேவன் தம்முடைய திட்டத்தை தமது பரிசுத்த புயத்தின் மூலமாகவே வெளிப்படுத்தினார் – எபி 1:1.

தீர்க்கதரிசிகள் மேசியாவின் பாடுகளைக்குறித்தும், அவமானங்களைக்குறித்தும், இன்னும் அவர் சிலுவையில் அடையப்போகும் மரணத்தைக்குறித்தும் சாட்சியாக முன்கூட்டியே எழுதியுள்ளனர். இருந்தபோதிலும் இஸ்ரயேலர்கள் இதை நம்பவில்லை. தங்கள் சிந்தையில் கர்வம் கொண்டிருந்ததால் இது போன்ற எளிய கோலத்தில் இருந்த இரட்சகரை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் எதிர்பார்த்த மேசியா மிகவும் வல்லமையுள்ளவரும் மாண்புள்ளவரும், மகிமையுள்ளவரும், விடுதலைக்கு வழிநடத்தும் போர்த்தளபதியுமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்திருந்தனர். அவர்களுக்காக இவர் வந்தபோது, தங்கள் தேசத்தின் மீது வைத்திருந்த பெருமிதம் அவர்களுடைய கண்களைக் குருடாக்கியது (யோவா 1:11).

“அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார். அவருக்குச் சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை”

விசுவாசமுள்ள தீர்க்கதரிசிகள் பல நூற்றாண்டுகள் தொடர்ந்து தீர்க்கதரிசனம் உரைத்து வந்த போதிலும், இந்த மேசியாவை ஏற்றுக்கொள்ளும்படி இஸ்ரயேல் மக்களைத் தயார் படுத்தவில்லை. அப்போஸ்தலரின் பிரசங்கங்களோ, பரிசுத்தவான்களின் போதனைகளோ, கிறிஸ்துவை இரட்சகராக இனங்கண்டு கொள்ளுமளவு இஸ்ரயேலர்களுக்கு வெற்றியைத் தரவில்லை. தேவனுடைய கரம் வேதத்தின்படியான உண்மை கிறிஸ்துவின் மூலமாக, தாழ்மையும் எளிமையுமானவர்களுக்கே வெளிப்படுத்தப்பட்டது. அவர்களே கிறிஸ்துவின் போதனையைக் கேட்டு பின்பற்றக்கூடியவர்கள்.

“ என் பின்னே வாருங்கள். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாயிரு க்கிறேன் ” – மத் 11:28.

இந்த அழைப்பை பெருமையுள்ளவர்கள் கேட்கமாட்டார்கள். கிறிஸ்துவின் இவ்வழிகள் இவர்களை ஈர்க்காது. ஆனால்,

“சாந்த குணமுள்ளவர்களை நியாயத்திலே நடத்தி சாந்த குணமுள்ளவர்களுக்கு தமது வழியைப்போதிக்கிறார்” – சங் 25:9.

“ எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய புயம் யாருக்கு வெளிப்பட்டது? ”

(அவர்கள் விசுவாசிக்கவில்லை என்பது இதிலிருந்து புரிகிறது).

இளங்கிளையைப்போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும், அவனுக்கு முன்பாக எழும்புகிறார். இது போன்ற அபாக்கிய நிலையிலுள்ள மனிதனாகக் காட்சி தருகிறார். உருவமற்ற வேரும், அழகில்லாமலும், ஜீவனற்றதும், நிலத்திலிருந்து உயிரடைய ஈரத்தன்மையே இல்லாமல், மரணமே முடிவாய் தோற்றமளித்தார்.

> "அவருக்கு அழகுமில்லை சௌந்தர்யமுமில்லை, அவரைப் பார்க்கும்போது நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் இல்லா திருந்தது"
> – ஏசா 53:1,2

என்று கூறுகிறார்கள்.

இஸ்ரயேலர் இயேசுவை தேவனுடைய புயமாக அங்கீகரிக்கவில்லை (ஏசா 53:7). அவருடைய இரட்சிப்பின் வல்லமையையும் புரிந்து கொள்ளவில்லை. யாவே தேவன், இந்த உலகை எவ்விதம் தன்னோடு ஒப்புரவாக்கிக் கொள்கிறார் என்ற காரண காரியங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

கிறிஸ்துவின் அழகில்லாத சரீரமும், சாந்த ரூபமான அவருடைய மனிதத் தன்மை ஆகிய இவைகள் எல்லாம் அவர்களுடைய கண்களை மறைத்துவிட்டன.

> "துக்கம் நிறைந்தவரும், பாடனுபவிக்கிறவருமாய் அவர்களுக்குக் காணப்பட்டார். அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், எண்ணக் கூடாதவருமாயிருந்தார், அவரை விட்டு தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டனர். மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு சிறுமைப்பட்டவர் என்று எண்ணினோம்" – ஏசா 53:3,4.

கோடானுகோடி நபர்களில் ஒரு சிறு கூட்டத்தார் மட்டுமே அவருடைய போதனைகளை விசுவாசித்தனர். மற்றவர்கள் தங்கள் முகத்தை அவரைவிட்டு மறைத்துக்கொண்டனர். முதலில் விசுவாசித்து, அனுதினமும் தங்கள் வாழ்வை அவரோடு பகிர்ந்து கொண்ட அந்த சிறு கூட்டத்தாரிலும் சிலர், முக்கியமான சமயங்களில் அவரை நிராகரித்து அவமானத்தைத் தேடிக்கொண்டனர். இவைகள் எல்லாம் சம்பவிக்கும் என்று அவருடைய மரணத்துக்கு வெகு காலம் முன்னரே முன்னுரைக்கப்பட்டிருந்தது.

“நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.” – ஏசா 53:5,6.

நாம் இதுவரை அறிந்தவைகளை ஆதாரமாகக் கொண்டு, அடுத்த பகுதியில் ஆசரிப்புக்கூடாரத்தின் படத்தினை ஆராயப்போகிறோம். ஏற்றவேளை வரும்வரை, முற்றிலும் அழகு வாய்ந்த ஒருவரை, தேவன் எவ்வாறு மறைத்து வைத்திருந்தார் என்பதைக் காணப்போகிறோம். – உன் 5:16.

# அத்தியாயம் 2

# ஆசரிப்புக் கூடாரத்தின் வெளியரங்க அமைப்பும், அதன் பொருளும்

தேவன் ஏன் பழமையும், புனிதமுமான முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தலங்களை மறைத்து வைத்தார் என்பதை கவனிக்க வேண்டும். தம்முடைய பிள்ளைகளை விக்கிரக வணக்கத்திலிருந்து விலக்கவே இவ்வாறு செய்தார். அவ்வாறு செய்திருக்காவிடில் மனிதர்கள் இந்த இடங்களை ஆராதனைக்குரிய வழிபாட்டுத்தலங்களாக மாற்றியிருப்பர். அவற்றில், விசுவாசிகளின் தகப்பனான ஆபிரகாம் அடக்கம் செய்யப்பட்ட இடம்; மற்றும், தன் சொந்த சகோதரர்களால் தள்ளப்பட்ட யோசேப்பு இவர் இயேசு கிறிஸ்துவின் முதல் வருகையில் தன் ஜனத்தாரால் புறக்கணிக்கப்படப்போவதன் முன் அடையாளமாக, விரோதிகளை வென்று இஸ்ரயேல் ஜனங்களை வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கானானுக்கு அழைத்துச்சென்ற யோசுவா நமது மகா பிரதான ராஜாவும், நல்லாயனுமான கிறிஸ்துவுக்கு முன்னடையாளமான தாவீது, இவர்கள் வாழ்ந்த இடங்கள் மக்களால் கண்டுகொள்ளமுடியாதபடி மறைத்து வைக்கப்பட்டது.

நம்முடைய இரட்சகர் வாழ்ந்த இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. இவைகளினால் தேவ பக்தியற்ற வழிபாடுகள் தடுத்து நிறுத்தப்பட்டது. பலஸ்தீனாவில் உள்ள அநேக இடங்களுக்கு நம்முடைய ஆண்டவர் சென்றிருக்கவில்லை என அறிகிறோம். அவர் சாலமோனின் பிரகாரத்திற்கு அடிக்கடி சென்று போதித்தது, ஒலிவ மலையில் அவர் ஓய்வெடுத்துக்கொண்டது, கெத்சமனே தோட்டத்திற்கு அவர் சென்றது, பிதாவாகிய தேவனோடு அநேக சமயங்களில் தன் பரிசுத்த நிலையைப் புதுப்பித்துக் கொள்ளத் தொடர்பு கொண்டது, மரணம் மட்டும் வியாகுலம் அடைந்தது –

இந்த எல்லா இடங்களிலும் மிகவும் புனிதமான இடம், அவர் இரத்தத்தைச் சிந்திய கொல்கொதா என்பதை நாம் அறிவோம். பொதுவான இடங்களாகத்தான் இவைகள் அறியப்பட்டுள்ளதே தவிர, சம்பவம் நிகழ்ந்த மிகச் சரியான இடங்கள் மறைக்கப்பட்டுள்ளன. விக்கிரகங்களை வணங்குபவர்கள், அப்புனித இடங்களை அரிதாகவே ஆராதனைத் தலங்களாகப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் ஒரு சில புனித ஸ்தலங்களை யூகத்தின் அடிப்படையில் வழிபாட்டு ஸ்தலங்களாக வழிபடுகின்றனர். உண்மையான தேவ வணக்கம், திறந்த ஆகாய விரிவுக்குக் கீழே உள்ளது.

என் ஆண்டவர் வானகத்திற்குக் ஏறிச் சென்ற உன்னத இடத்தில் என்னுடைய நேசம் குடிகொண்டுள்ளது.

அதுபோல் தேவ ஞானமானது, தம் திட்டங்களின் சிறப்பான அம்சங்களை புரிந்து கொள்ளும் சரியான காலம் வரும்வரைக்கும் மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது.

## தேவன் மறைத்து வைத்ததின் நோக்கம்

வல்லமையான தேவதூதர்களும் வணங்குகின்ற ஒருவரின் மனித சுபாவத்தையும், லோகோஸாக இருந்த ஆவியின் சுபாவத்தையும் உங்கள் மனதில் நிறுத்தி வேறுபடுத்திப் பாருங்கள். லோகோஸாக, மகிமையடைந்திருந்த நிலையை விட்டுவிட்டு, பூமியில் சாதாரண மனிதனாகத்தாழ்ந்த கோலத்தை ஏற்றுக்கொண்டநிலையையும், ஒப்பிட்டுப் பாருங்கள். மனிதர்களால் தள்ளப்படுவதற்கும், அவமானப்படுவதற்குமே அவர் பூமிக்கு வந்தார். அடுத்ததாக நாம் ஆசரிப்புக்கூடாரத்தினைக் கவனிப்போம். விவரிக்க இயலாத அழகுடைய அதன் இரண்டு தங்கத்தினாலான அறைகளை உங்கள் சிந்தையில் வையுங்கள். இவ்வுலகம் உண்டாகுமுன் தன் பிதாவோடே தான் பெற்றிருந்த மகிமையின்மேல் இன்னும் பூரண மகிமையை அடைய வேண்டும் என்று வேண்டிக் கொண்டவரை தியானம் பண்ணுங்கள்.

இப்பொழுது துணியால் ஆன அந்தக் கட்டிடத்தை விட்டு வெளியே வருவோம். தன் சொந்த ஜனங்களிடத்தில் வந்த அவரின் காணவியலாத வெளியரங்கத் தோற்றத்தினைக் குறித்துச் சிந்தியுங்கள். அவர்கள் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் விரும்பப்படத்தக்க ஒன்றையும் அவர்கள் அவரிடத்தில் காணவில்லை. மேலும் காண இயலாத இந்த வெளிப்பக்கத்தின் கீழே தெய்வீகத்திட்டத்தின் காட்சிகள் இருந்தது. இந்த ஆசரிப்ப்புக்கூடாரம் நான்கு கூரைகளால் மூடப்பட்டிருந்தது. – யாத் 26:14.

1.வெளி பாகம் தகசுத் தோலால் மூடப்பட்டிருந்தது,
2.அதன் கீழே சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடா தோல்
3.அதையடுத்து ஆட்டு ரோமத்தாலான துணி
4.அதற்குக்கீழே, உட்புறம் மூடப்பட்ட சித்திரத் தையலாலான மெல்லிய வஸ்திரம் இருந்தது.

ஆசரிப்புக்கூடாரத்தின் அழகையும், மகிமையையும் பார்த்துச் சிலர் ஆச்சரியப்பட்டனர். அதன் தங்கத்தாலான தடுப்புகள், தங்க வேலைப்பாடுகள்

நிறைந்த மரச்சாமான்கள், அழகிய வேலைப்பாடுகள் நிறைந்த திரைச்சீலைகள், இவைகள் எல்லாம் மக்களின் பார்வையில் இருந்து முற்றிலும் மறைக்கப்பட்டிருந்தன. சூரிய வெளிச்சம் கூட அங்கு உட்புக முடியாதிருந்தது.

அதனுடைய ஒரே வெளிச்சம் பரிசுத்த ஸ்தலத்தின் இருந்த விளக்கின் வெளிச்சமும், மகா பரிசுத்த ஸ்தலத்தின் "ஷெகின்னா" வின் மகிமையுமே. ஆனால் இக்கூடாரத்தில் செய்யப்படும் பலி முறைமைகளின் மூலம் கொடுக்கப்பட்ட படிப்பினைகளை அனுசரிப்பதன் மூலமே இவைகள் மூலம் கொடுக்கப்பட்ட படிப்பினைகளை அனுசரிப்பதன் மூலமே இவைகள் பூரணப்படும். இவ்வாறு நிழலாகச் சொல்லப்பட்ட கரகரப்பான திரைகளுக்குள்ளே காணமுடியாத தோல்களுக்குள், உதாரணமான தோற்றத்தை மூடி வைத்து அதன் அழகை தேவன் மறைத்ததுபோல, ஆவிக்குரிய மகிமையின் அழகையும் தேவனுக்கென்று தங்களை ஒப்புக்கொடுத்தவர்கள் மட்டுமே அதாவது, ராஜரீக ஆசாரியக்கூட்டத்தார் மட்டுமே காணும்படியாகச்செய்தார். இந்த உலகமும் வெளியில் இருப்பவர்களும் பார்த்து பாராட்டத் தவறிய மகிமையானவைகள், மறைக்கப்பட்ட நிலைமையில் உள்ளன. புதிய சிருஷ்டிகளாக இருக்கிறவர்களின் நிலையும், அவர்களின் நம்பிக்கையும் மனிதர்களிடமிருந்து மறைக்கப்பட்டிருக்கிறது.

கிறிஸ்து இயேசு ஒரு மனிதனாக வருவதனால் மட்டுமே தேவனுக்கும் மனிதனுக்கும் ஒப்புரவாக்குதலைக் கொண்டு வரமுடியும். துக்கம் நிறைந்தவரும், பாடுகளை அனுபவிக்கிற மனிதனாக வந்தபடியால் (ஏசா 53:3), அவரால் இரக்கமும் உண்மையுள்ள பிரதான ஆசாரியனாக முடிந்தது (எபி 2:17)

யோசுவா இஸ்ரயேல் ஜனங்களுடன் செங்கடலைக் கடந்து, வனாந்தரத்தின் கஷ்டங்கள் துயரங்களை எல்லாம் அனுபதித்த பின்னரே, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்திற்குள் மகத்தான வெற்றியுடன் புகுந்து, இஸ்ரயேலர்களின் தளகர்த்தாவாக ஆக முடிந்தது. அவரிலும் மேலான யோசுவா, அநேகம் பிள்ளைகளை மகிமையில் கொண்டு வந்து சேர்க்கப் பாடுகளை அனுபவிக்க வேண்டியதாயிருந்தது (எபி 2:10). தேவன் தம்முடைய சொந்த ஜனங்கள் உபத்திரவங்கள் மூலமாய் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளும்படி ஏற்பாடு செய்திருந்தார். இந்தப்பாடுகளின் மூலமாக நித்தியமான பூரணத்தை அடைய அவர்கள் ஆயத்தமாக்கப்பட்டனர். விசுவாசத்தினால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இரட்சரை அறிந்து தங்கள் மரணம் வரை உறுதியாய்த் அவரைப் பின்தொடர்ந்தனர்.

ஆனால் இப்பொழுதோ ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நமக்கு, நிழல்கள், தீர்க்கதரிசனங்கள் மட்டுமே நமக்குரியவைகளாயிராமல், நாமே உண்மையான பொருளாகவும், நிஜங்களாகவும் விளங்குகின்றோம். நம்முடைய பாடுகளை ஏற்றுக் கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார். நமக்குச் சமாதானத்தை உண்டு பண்ணும் ஆக்கினைக்காக அவர் அடிக்கப்பட்டார் என்பது நமக்குத் தெரியும். நாம் வழிதப்பிச் சென்ற அடுகளைப்போல இருந்தோம். ஆனால் தேவன் நம்முடைய குற்றங்களை அவர்மீது சுமத்தினார்.

**மனிதர்களைப்போல் ஆக்கப்பட்டார்:**

ஆசரிப்புக் கூடாரத்தை மூடியிருந்த வெளித்திரை, ஒரு நீரில் வாழும் மிருகத்தின் தோலால் செய்யப்பட்டிருந்து. இத்தோல் மனிதனின் கைவேலைப்பாடுகளினால் செய்யப்படவில்லை. ஒருவர் தான் முன்பு பெற்றிருந்த இயல்பான நிலையை விட்டுவிட்டு பூமிக்கு வந்ததை, கடலிலிருந்து எடுக்கப்பட்ட இத்தோல் குறிக்கிறது. இந்த தகசுத்தோலின் கீழே ஒவ்வொரு கண்களுக்கும் மறைக்கப்பட்ட சிவப்பு தீர்ந்த ஆட்டுக் கடாவின் தோல் இருந்தது.

இந்த கடந்த காலப் பின்னணியில், மூடி மறைக்கப்பட்ட திரைக்குள் ஈடுபலியைப் பற்றிய கருத்தைப் படிப்பது மிகவும் சுலபமாகிறது. ஆபேலின் பலி ஈடுபலிக்கு முன்னடையாளமாக இருக்கிறது. அப்பலி ஏற்றுக் கொள்ளப்பட்டதைக் குறித்து ஒருவேளை ஆச்சரியப்படலாம். ஆபிரகாம் மோரியா மலையை நோக்கி பயணம் செல்லும்போது ஆழ்ந்த சிந்தனையோடு சென்றிருப்பார். ஆனால் அங்கு சென்றபோது ஒரு ஆட்டுக்குட்டி தன் குமாரனுக்கு பதிலாக பலிசெலுத்தக் கொடுக்கப்பட்டது. அவருடைய பின் சந்ததிக்குக் கொடுக்கப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தைப் பற்றியோ, அதன் படத்தைப்பற்றியோ ஆபிரகாமிற்குத் தெரிந்திருக்காது. அந்த இடம் ஒரு உன்னதமும் ஆச்சரியமுமான ஆலயமாகப்போகிறது என்பதும் அவருக்குத்தெரியாது. ஆபிரகாம் பலியிட்ட இடத்தில்தான் அந்த ஆலயம் கட்டப்பட்டதாகப் பழங்கால வரலாறுகள் கூறுகின்றன.

அடையாளமாகச் சொல்லப்பட்ட சாலமோனின் மகிமையான ஆலயம் நம்முடைய குறைகளை எல்லாம் கடந்து நம்மை உற்றுநோக்கச் செய்கிறது. அதிலுள்ள சிவப்பு தீர்ந்த ஆட்டுக்கடாவின் தோல் தேவையில்லாமலிருந்தது. அதற்குக்கீழே ஆட்டுக்கடா தோலை மூடியிருந்த ஆட்டு ரோமத்தின் தோலும் கூட அவசியமற்றதாயிருந்தது. இந்த ஆலயத்தின் உண்மையான பொருளை நாம் அறிந்து கொள்ள ஏற்ற காலம்வரும் என்பதைக்குறித்து எரே 33:3 ல் தேவன் கூறுகிறார். (ஒப்பிட்டுப்பார்க்க 1கொரி 14:12)

## மறைக்கப்பட்ட திரை

ஆட்டுரோமத்தால் செய்யப்பட்ட திரையானது மறைக்கப் பட்டிருந்தது. ஆசரிப்புக் கூடாரத்திற்குள் ஊழியம் செய்யும் ஆசாரியர்கள் கூட அதைக் காண முடியாது, கூடாரத்திற்குள், தங்க இழைகளால், துணியில் சித்திரத்தையல் வேலைப்பாடுகள் நிறைந்த, மெல்லிய பஞ்சு நூலாலான திரைச்சீலையை மட்டுமே அவர்களால் பார்க்க முடியும். ஆட்டு ரோமத்திலான இந்தத்திரையை சிவப்பு தீர்ந்த ஆட்டுக் கடாத்தோல் மூடியிருந்தது. ஆட்டுரோமத்திரை மற்ற இரண்டிற்கும் நடுவாக, அதாவது மேலும் கீழுமாக மூடியிருந்தது. ஆடுகளாகச் சொல்லப்பட்ட பூரணமற்றவர்கள் கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக இந்த ஆசரிப்புக் கூடாரத்தில் ஒரு இடம் பெற அனுமதியளிக்கின்றது. இந்த ஆசரிப்புக் கூடாரத்திற்குள் இருப்பவர்கள் மேல் நோக்கிப் பார்க்கும்போது, தூய வெண்மையையும், பொன்னையும் மட்டுமே காண முடிந்தது, இது எதைக் குறிக்கிறதென்றால், 2கொரி 5:16ல் நாம் காண்கிறபடி ஆகையால் இது முதற்கொண்டு நாங்கள் ஒருவரையும் மாம்சத்தின்படி அறியோம். ஆனால் ஆவியின்படி அறிவோம் என்பதைக் கூறுகின்றது. அந்த கூடாரத்திற்கு வெளியே இருந்தவர்கள், எவ்வித அழகுமின்றி மூடப்பட்டிருந்த திரையை மட்டுமே பார்த்தார்கள். தாங்கள் வேண்டாம், ஆகாது என்று தள்ளியவரையும் இப்படித்தான் பார்த்தார்கள் என்பதையே இது காட்டுகிறது.

## தகசுத்தோல் எதற்காக?

இறந்துபோன கடல் வாழ் மிருகத்தின் மூலம் கிடைத்த அந்தத் தோல் வெளிப்புறத்தை மூடியிருப்பதற்கு ஏதாவது விளக்கம் உண்டா? இல்லை. பாரம்பரியமாக ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்படும் பலிகளிலே, ஒரு கடல்வாழ் பிராணியாவது, பலிபீடத்திலே செலுத்தப்படவில்லை. ஞானமும் அறிவும் தன்னுள்ளே பொக்கிஷமாகப் பெற்றிருந்த ஒருவர், ஆதியிலே பெற்றிருந்த தன் இயல்பான நிலையையும், தன் தகப்பன் வீட்டையும் விட்டு இங்கு வந்த ஊழியம் செய்வதையே அந்த திரைச்சீலை குறிக்கிறது. கொலோ 2:3.

## ஆட்டுக்கடாத் தோல் எதற்காக?

தேவன், ஆசரிப்புக்கூடாரத்தில், பாவ நிவாரணத்திற்கான ஒப்புரவாக்குதலை மட்டும் விளக்கியிருந்தால், இயேசு பரத்தைவிட்டு வந்ததில் மட்டுமே அவரின் தகுதி இல்லை என யூகிக்கலாம். மாறாக அவர் தந்த பலியினால்தான் என்பதை சிவப்பு தீர்ந்த தோல் எடுத்துக்காட்டுகிறது.

இந்த வசனத்தைக்குறித்துப் பார்க்கும்போது, எப்படியானாலும் நமது சொந்த விளக்கங்களைக் கொடுக்கப்போவதில்லை. எல்லா ஜனங்களுக்கும் இரட்சிப்பு, சிந்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தத்தில் இருக்கிறது. அதில் மட்டுமே தான் உள்ளது என்பதை நாம் நன்கு புரிந்தாக வேண்டும்.

"நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்." – அப் 4:12

"ஒருவனாவது தன் சகோதரன் அழிவைக் காணாமல் இனி என்றைக்கும் உயிரோடிருக்கும்படி எவ்விதத்தினாலாவது, அவனை மீட்டுக் கொள்ளவும் அவனிமித்தம் மீட்கும் பொருளை தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே. அவர்களின் ஆத்தும மீட்பு மிகவும் அருமையானது" – சங் 49:7,8.

எபிரேயமொழியில் யாவ்காவர் **"YAWKAWR'** என்பதற்கு விலையேறப் பெற்றது அல்லது ஒரு விலைக்கிரயம் தேவைப்படுகிறது என்பது பொருள். காரணம் என்னவெனில் "நீதிமான் ஒருவனாகிலும் இல்லை" –ரோம 3:10. முயற்சியினால் மட்டுமே ஒருவன் நீதிமானாகிவிட முடியாது. இந்த உண்மை, மெல்லிய துணியும், ஆட்டின் உரோமமும் சிவப்பு தீர்ந்ததாய் இல்லாமல் இருப்பதன் மூலம் நமக்கு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பதிலாக, அவைகள் சிவப்பு தீர்ந்த மூடுதிரைக்குக் கீழே இருந்தது. இவ்விதமாய் ஆசரிப்புக்கூடாரப்படத்தில் ஒரு இடத்தைப் பிடிப்பவர்கள், அதனை தங்கள் சொந்த தகுதியினால் அடைய முடியாது என்பதை விளக்குகிறது. இவைகள் எல்லாம், அனைவரையும் மீட்கும் பொருளாகத் தம்முடைய ஆத்துமாவை மரணத்தில் ஊற்றிய ஒருவரின் தகுதியினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்படுகிறது – ஏசா 53:12, 1தீமோ 2:6.

தேவனுடைய வசனங்களில் அதன் பாடங்கள் தெளிவுபடுத்தப் படாதவரையில், இது போன்ற சித்திர அமைப்போடு கூடிய போதனைகளை உறுதியாய்க் கூற முடியாது. பரிசுத்த அமைப்போடு கூடிய போதனைகளை உறுதியாய்க் கூற முடியாது. பரிசுத்த அமைப்பாகிய ஆசரிப்புக்கூடாரம், தேவனுக்கு முன்பாக, மனுக்குலத்தின் ஒரு சாரார் நிற்கக்கூடிய ஸ்தானத்தை முன்னேற்பாடாகக் காண்பிக்கிறது என்பதை வேத வசனம் போதிக்கிறதா என நாம் ஆராய வேண்டும்.

"ஆதாமுக்குள் எல்லோரும் மரிப்பதுபோல, கிறிஸ்துவுக்குள் அனைவரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்"

என்பதை நாம் அறிவோம் (1கொரி 15:22). ஆதாமைப்பற்றியோ அல்லது அவன் சந்ததியைப்பற்றியோ பரலோகத்தில் ஏதாவது முறையீடு செய்யப்பட்டதா என்பதைக் குறித்து வேத வசனங்களில் குறிப்பேதுமில்லை.

மாறாக, ஆதாமின் பொதுவான குடும்பத்தைத் தவிர்த்து, ஒரு விசேஷமான வகுப்பாரைப் பிரித்தெடுக்கின்றார் என்ற செய்திகளைப் பார்க்கிறோம். அப்போஸ்தலனாகிய யோவான் இவைகளைப்பற்றி பேசும்போது,

"நீதிபரராகிய இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார் " –1யோவா 2:1.

மேலும் நாம் எபிரேயருக்கு எழுதிய நிருபத்தில் படிக்குபோது, இவர்

"தேவனுடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து, சர்வத்தையும் தம்முடைய வல்லமையுள்ள வசனத்தினாலே தாங்குகிறவராய், தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி, உன்னதத்திலுள்ள மகத்துவமானவருடைய வலது பாரிசத்திலே உட்கார்ந்தார்" என்று காண்கிறோம் – எபி 1:3.

"முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்" – எபேசி 2:13

மேலும்...

"மெய்யான பரிசுத்த ஸ்தலத்திற்கு அடையாளமான கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே, கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், பரலோகத்தில் தானே இப்பொழுது நமக்காக தேவனுடைய சமூகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" – எபி 9:24.

அவர் நம்மை இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்தினின்று „விடுவிக்கும்படி நம்முடைய பாவங்களுக்காக தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தார்" – கலாத் 1:4.

இந்த வகுப்பார், ஈடுபலியினால் கிடைத்த நன்மைகளை (**Ransom price**) கடைப்பிடிப்பதில் பொதுவாக இவ்வுலகத்திலிருந்து மிகவும் வேறுபட்டுள்ளனர். அப்போஸ்தலர்கள், இயேசுகிறிஸ்து திருச்சபைக்காக மட்டுமே மரித்தார் என்று சில காலங்கள் போதித்து வந்ததால்,

“புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்பு கூறுங்கள். அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்பு கூர்ந்து.. தம்மைத் தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார் என்று கூறுகின்றனர்” எபேசி 5:25-27.

“நீங்கள் கிரயத்திற்குக் (Price) கொள்ளப்பட்டீர்கள்” -1கொரி 6:20

இந்த உண்மையானது, வெளிப்படையான வேத வாக்கியங்களின் போதனைகளை மறைத்துவிடக்கூடாது. இயேசு அகில உலக மாந்தருக்காகவும் தன்னை ஈடுபலியாக ஒப்புக்கொடுத்தார். இயேசுவின் இந்த தியாகபலி தெய்வீக உந்துதலின் மூலம் முன்னுரைக்கப்பட்டு, 19 நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே நிறைவேற்றப்பட்டது.

இது ஒரு இணையான, மிகச் சரியான விலையாக இருப்பதாலே, இந்த விலைக்கிரய பலிக்கு ஈடாக வேறு எதையும் சேர்க்க முடியாது. அதற்கான எந்த அவசியமும் இல்லை. ஆண்டவராகிய இயேசு தனிமனிதனாகவும், அவருடைய பணிகளிலும், பரிபூரணத்துவம் பெற்றிருந்தார். இதனால் மனிதனின் எல்லாவிதமான தேவைகளையும் சந்திக்கக்கூடிய, ஒரு எல்லையே இல்லாத முழுமையைப் பெற்றிருந்தார். மேலும் அவர் நமக்காகப் பரலோகத்தில் பிரவேசித்திருக்கிறபடியால் நாம் சந்தோஷப்படுகிறோம்.

“அதேனென்றால், சிருஷ்டியானது அழிவுக்குரிய அடிமைத்தனத் தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளுக்குரிய மகிமையான சுயாதீனத்தைப் பெற்றுக் கொள்ளும் என்ற நம்பிக்கையோடே.. இதுவரைக்கும் சகல சிருஷ்டியும் ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப்படுகிறது ...ஆவியின் முதற் பலன்களைப் பெற்ற நாமும் கூட, நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருவதற்குக் காத்திருந்து, நமக்குள்ளே தவிக்கிறோம்” - ரோம 18:20-23.

“அழிவுள்ள பொருட்களாகிய வெள்ளியினாலும், பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய தோற்றத்திற்கு முன்பே குறிக்கப்பட்டவராயிருந்து, தமது மூலம் தேவன் பேரில் விசுவாசமாயிருக்கிற உங்களுக்காக இந்த கடைசி காலங்களில் வெளிப்பட்டார்” -1பேது 1:18-20.

பேதுருவின் முதலாவது பொதுவான நிருபத்தில் ஆலோசனையான் ஒரு சிறிய குறிப்பை (1பேது 2:9) இவ்வாறு வாசிக்கிறோம்.

"நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாகவும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் இருக்கிறீர்கள்"

இவ்விதமாக சொந்தமாக்கப்படாத இந்த உலக ஜனங்களிலிருந்து முன்னதாகவே முழுக் கிரய்த்துக்குக் கொள்ளப்பட்டபோதும் மிகவும் வித்தியாசமாய் மேன்மைப்படுத்தப்பட்டிருக்கிறோம். மிகத்தெளிவாக...

"கிறிஸ்து தம்மை தேவனுக்கு சுகந்த வாசனையான காணிக்கையா கவும் பலியாகவும் ஒப்புக்கொடுத்து நம்மில் அன்பு கூர்ந்தார்"
– எபேசி 5:2

" அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின் மேல் சுமந்தார் " – 1பேது 2:24

" இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப்பட்டதினாலே அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கிறோம்" –எபி 10:10

"பாவமறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" – 2கொரி 5:21.

**ஆசாரியர்கள் செலுத்தும் பலிகள்**

மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, வேத வாக்கியமானது, இயேசுவின் பலிகளினாலே கிடைத்த தற்போதைய நன்மைகள் என்ன என்பதைக் குறித்து உறுதியாய்ச் சொல்லாமல் இருப்பதுபோலத் தோன்றுகிறது. இயேசுவின் பலிகளைக் குறித்த ஒரு சில போதனைகளை தெளிவாகப் போதிக்காமல் விட்டுவிட்டதைப்போலவும் தோன்றுகிறது.

நம்முடைய சிலுவையைச் சுமந்துகொண்டு அவரைப் பின்பற்றிவர இயேசு நம்மை அழைக்கிறார் – மத் 16:24. இன்னும் பவுல் தெளிவாய்க் கூறுகின்றபடி,

"அப்படியிருக்கச் சகோதரரே, உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவ பலியாக ஒப்புக்கொடுக்க வேண்டும் என்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக் கொள்கிறேன். இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை " – ரோமர் 12:1.

மூன்றாவது குரலாக பேதுரு சொல்கிறார்

“நீங்களும் ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும், இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளைச்செலுத்தும்படி, பரிசுத்த ஆசாரியக் கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள்” –1பேது 2:5

நாம் ஒரு காலத்திலே தேவனற்றவர்களும், நம்பிக்கையற்றவர்களுமாய் இவ்வுலகில் இருந்தோம். இப்பொழுது நாம் பலி செலுத்தும் சிறப்புரிமையைக் குறித்து, அப்போஸ்தலனாகிய பவுல் தெளிவாகச் சொல்லும்போது –

“புற ஜாதியாராகிய பலி, பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்பட்டு, தேவனுக்குப் பிரியமான பலியாகும்படி, நான் தேவனுடைய சுவிசேஷ ஊழியத்தை நடத்தும் ஆசாரியனாயிருந்து...” – ரோம 15:15,16.

புறஜாதியாருக்கு இயேசு கிறிஸ்துவின் ஊழியக்காரனாகும் பொருட்டு, தேவன் எனக்கு அளித்த கிருபை...என்கிறார்.

நம்முடைய அன்பின் பரம தந்தை, நம்மிடத்திலே ஒரு பலியைக் கொண்டுவா, நான் அதை ஏற்றுக்கொள்கிறேன் என்று கூறிவிட்டு, அது வந்து சேர்ந்த பின்னர் அவருடைய திட்டத்திலே அதற்கு இடமில்லை என்று சொல்வாரா? நிச்சயமாக அவ்வாறு செய்யமாட்டார் என நாம் நம்புகிறோம். அது பிரியமானதாக இருந்து, பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுமானால் அதற்கேற்ற வெகுமதி பெறும்.

பின்வரும் வசனங்களில் (1பேது 2:6–8) திருச்சபையின் தலையாகிய கிறிஸ்துவின் மேல் வைக்கும் நமது விசுவாசம் அங்கீகரிக்கப்படும் என்பது ஒரு திறவுகோலாக விளக்கப்பட்டிருக்கிறது.

பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே தமக்குச் சுவீகாரப் புத்திரராகும்படி முன்குறித்திருக்கிறார் என்கிற மேலான கிருபைக்கு (எபேசி 1:5–6) நாம் காரணமாகும் போது அது எவ்வளவு ஆச்சரியமாயிக்கிறது.

புகழ்ச்சியின் பலிகள் (எபி 13:15) என்பது உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியாக இருக்கவேண்டும். யார் அவருடைய மகிமையின் புகழ்ச்சியாக இருக்கிறார்களோ, அவர்களுடைய சரீரத்தின் ஒரு பகுதியே இந்த பலியாகும்.

திருச்சபையார் செலுத்தும் தியாக பலிகளால், பாவிகளுக்கு எதிரான தண்டனையாகிய மரணத்தை நீக்க முடியும் என்று அப்போஸ்தலர்கள் போதுக்கவில்லை. ஆம் அவர்களுடைய பலிகள் பிரியமும் ஏற்றுக் கொள்ளக்

கூடியதுமாயிருக்கிறது. இந்த உண்மையை நாம் சந்தேகிக்க முடியாது. ஆனால் ஆதாமின் பாவத்தைப் போக்குவதற்கு திருச்சபையின் பலி ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பது சரியான சான்றாக இருப்பதோடு, இயற்கையாகவே அதனிடம் அந்தத் தகுதி இல்லை. பாவங்களுக்காக ஒரே பலி இயேசு ஒப்புக்கொடுத்ததாகும். (எபி 10:10-12). (1பேது 3:18).

இது பஸ்கா ஆட்டின் மூலம் முன்னறிவிக்கப்பட்டது. அது தேவனுடைய உன்னதமான நோக்கத்தைப் பூர்த்தி செய்து, தொடர்ந்து பாவத்தைப்போக்கி வருகிறது. (எபி 9:26). ஆதாமின் பாவங்களை அகற்ற போதுமான அளவு சரிநிகரான விலைக்கிரயம் அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆதாமின் சந்ததியார் சுதந்தரித்துக்கொண்ட எல்லா பாவங்களையும் போக்க அதுவே போதுமானதாகும். மற்ற எந்த கூடுதலான பலியும் இந்த ஈட்டுக்கிரய பலியோடு சம்பந்தப்படாமல், வேறு சில காரணங்களுக்காகவும் இருக்க வேண்டும். நாம் இன்னும் இரண்டு தடைகளைச் சந்திக்கின்றோம். 1. நம்முடையபலிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டதென்று நிச்சயித்திருந்தோமானால் நாம் தேவனுக்கென்று அளிப்பதற்காக என்ன வைத்திருக்கிறோம்? 2. அந்த உன்னதமான நியாயாதிபதி நம்முடைய பலிகளை ஏற்றுக்கொள்ள எந்தவித எல்லையை வைத்திருக்கிறார்?

முதல் கேள்விக்கு, நாம் பாவிகள் என்பதை உணர்ந்திருந்தாலும், தேவன் நம்முடைய பலிகளை ஏற்றுக்கொள்வதன் இரகசியம், நாம் தேவனுக்கு முன்பாக எந்தளவு நீதிபரராக விளங்குகிறோம் என்பதைப்பொறுத்தது என்று அறிந்து உணர்ந்திருக்கிறோம். மேலும் நம்முடைய சுய நீதியை அல்ல, தேவனால் நீதிக்கு உட்படுத்தப்பட்ட, பரிசுத்தமாக்கப்பட்ட நம்முடைய சரீரங்களையே ஒப்புக்கொடுக்க வேண்டும் (ரோம 12:1). அதற்காக நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு அவரைத் தொடர்ந்து கல்வாரிக்குச்செல்வதை (மத் 16:24) நம் ஆண்டவர் ஒரு காட்சியாக கூறுகின்றார்.

ஒரு சரீரத்தை பலியாகத் தருவது என்பது, தன் ஜீவனையே ஒப்புக்கொடுப்பதாகும். ஆனால் நாம் அபூரணராயிருக்கும் நிலையில் எப்படி நமது ஜீவனை ஒப்புக் கொடுக்க முடியும்?

இக்குழப்பம் இரண்டாம் கேள்விக்கு பதிலளிக்கும்போது தெளிவாகும். நாம் ஒப்புக்கொடுக்கின்ற பிரியமான பலிகளால், நம் அன்பின் ஆண்டவரின் மகிமை பறிக்கப்பட்டுவிடுமோ என்ற பயத்திற்கே இடமில்லை. நம்முடைய பலிகள் ஏற்கத்தகுந்தவை என்று அங்கீகரிக்கப்படுவதால் அவருடைய மகிமையின் கிருபையை உளமாறப் போற்றிப் பாடுவோம் என்பதை இப்பகுதியின் இறுதியில் காணஇருக்கின்றோம்.

ஓ! ஒன்றுபட்ட அன்பிலிருந்து வார்த்தைகள் பிறக்குமா?
ஆம்! நன்றியுணர்வினால் அவைகளைப்பறை சாற்ற முடியும்
அது உள்ளத்தின் ஆழத்தில் பிரகாசிக்கிறது.
ஆனால் அதை உன்னால் வாசிக்கமுடியாது.

நன்றியறிதலான பாடலை உமக்கு நான்
நித்திய நித்தியத்திற்கும் பாடுவேன்
என்னுடைய எல்லையில்லா சந்தோஷம்
எவ்விடத்திலும் உம் துதியை அறிக்கையிடும்

## அத்தியாயம் 3

# ஆசரிப்புக் கூடாரத்தில் செலுத்தப்பட்ட பலிகளின் பொருள்

தேவன், திருச்சபையார் தியாக பலியைக் காணிக்கையாகக் தர வேண்டுமென ஏற்பாடு செய்திருக்கிறார். தமது குமாரனும் நீதிபரருமாகிய இயேசு கிறிஸ்து மூலமாக அவைகளை அங்கீகரிப்பதற்கும் கூட அவர் ஏற்பாடு செய்திருக்கிறார். பாவநிவாரணம் என்ற பாடத்தில் வேறுபாடுகள் நிலவுகின்றபோதிலும், இந்த உண்மைகள் எதிர்க்கக்கூடியவைகளல்ல.

தேவனால் கொடுக்கப்பட்ட வேத வாக்கியங்களின் உண்மையான பொருளை அவர்களுக்கு ஊக்கமளிக்கின்ற அதே ஆவியினால் வழிநடத்தப்படாதவரையில், ஒருவராலும் அதைப் புரிந்து கொள்ள முடியாது என்ற அடிப்படையான ஒரு உண்மையை வலியுறுத்துகிறோம் (1கொரி 2:14). அந்த ஆவி ஒரு துணையாளரைப் போல எல்லா சத்தியத்திற்குள்ளும் நம்மை வழி நடத்தும் என வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிறது (யோவா 16:13) ஆனால் அந்த அழமான அறிவு எல்லா சத்தியத்தையும் ஒரே சமயத்தில் தெளிவுபடுத்தும் என்று எங்கேயும் சொல்லப்படவில்லை. இப் பாடத்தின் கடைசி அத்தியாயத்தைத் துவக்கியுள்ள நாம், இந்தச் சிந்தனைகளோடு வேறுபடுகின்ற வாசகர்களை, ஞானமாய் அறிந்து கொள்ள அவர்களுடைய விளக்கங்களை இவைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ள கேட்டுக் கொள்கிறோம்.

நமது ஆண்டவரைப் பின்பற்றுகிறவர்கள், ஒருமைப்பாட்டில் வாழவே அழைக்கப்பட்டிருக்கிறார்கள். அதற்கு ஊக்கம் தருகின்ற சத்திய அறிவினால் மட்டுமே அதனை அடைந்துவிட முடியாது. அந்த ஒருமைப்பாடு இயல்பாகவே நமக்குள் இருக்கவேண்டிய ஒன்று. ஏனெனில்,

> “ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்” – 1கொரி 12:13.

அந்த ஆவியை உடையவர்களாயிருந்தால் அந்த சரீரத்தின் ஒவ்வொரு அங்கமும் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்க முயல வேண்டும்.

எப்பொழுது, வாதத்திற்கே ஒவ்வாத ஒரு விளக்கத்தை வேத வசனங்களில் வெளிப்படையாகச் சொல்லப்பட்டது எதிர்க்கிறதோ, அந்த விளக்கமானது ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. மேலும் தனிப்பட்ட ஒருவர் கூறும் முரண்பாடான வேத விளக்கங்கள் ஆபத்து விளைவிக்கும். நாம் சரி என்று ஏற்றுக்கொண்ட வேத விளக்கங்களுக்கு முரண்பட்ட கருத்துக்களை புரிந்து

கொள்ளத் தவறலாம். இவ்வழியில் தவறுவதற்கு, அப்படி ஒரு வேத வாக்கியமே இல்லை என்று நிரூபிக்க முடியாது. பாவ நிவாரணத்தில் வேதம் போதுக்கிற இந்த விளக்கங்களுக்கு இன்று வரை நாங்கள் அறிந்து கொண்டபடிஇங்கு சொல்லப்பட்ட கருத்துக்களுக்கு எதுராக எந்த வசனங்களையும் காணவில்லை. சிலர் சொல்லி இருக்கலாம். ஆனால் ஒவ்வொரு காரியத்திலும் முரண்பாடாய் வைக்கப்பட்டுள்ள சிந்தனைகள், விளக்கமளிப்பவர்களால் சொல்லப்பட்டதே தவிர அப் பாடங்களிலில்லை.

## மரணத்தில் ஒன்றாக நடப்பட்டோம்

இயேசு, பிதாவானவர் தமக்குக் கொடுத்தவர்களுக்காக விசேஷமான முக்கியத்துவத்தைப் பதிவு செய்திருக்கிறார் (யோவான் 17). நான் அவர்களுக்காக வேண்டிக் கொள்கிறேன். உலகத்தாருக்காக வேண்டிக் கொள்ளாமல் நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்கிறேன். அவர்கள் உம்முடையவர்களாக இருக்கிறார்களே (9ம் வசனம்). தந்தை இயேசுவை உலகிற்கு அனுப்பினதுபோலவே, இவர்களையும் உலகிற்கு அனுப்பியிருக்கிறார். பிதாவோடும் குமாரனோடும் உள்ள பரிசுத்தமாக்கு தலினாலும், ஒருமைப்பாட்டின் மூலமே, இந்த உலகம் நம்புவதற்கு ஏதுவாகும். தன்னுடைய குமாரன் மேல் அன்பாயிருந்ததுபோல, தெரிந்துக்கொண்ட இவர்கள்மேலும் பிதா அன்பாயிருக்கிறார் என்று மேலும் அவர் கூறுகிறார்.

தம்முடைய பாடுகளிலும், தியாக வாழ்க்கையிலும், தமது மரணத்திலும் யாரெல்லாம் பங்கெடுத்துக்கொண்டார்களோ, அவர்களைத் தன்னுடைய எல்லாவித மகிமையிலும் இயேசு உயர்த்துகிறார். இவ்வாறு பங்கெடுத்துக்கொண்டவர்களை வர இருக்கின்ற மகிமையிலும் பங்கடையச் செய்கிறார். இவைகள் அனைத்தும் அவருடைய மரணத்தின் சாயலோடு கூட இணைக்கப்பட்டிருப்பதால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் சாயலிலும் அவர்கள் இணைக்கப்பட்டு உயிரோடு எழுப்பப்படுவர்.

" நாம் அவரோடு கூட மரித்தோமானால் அவரோடுகூடப்
பிழைத்துமிருப்போம், அவரோடே கூடப் பாடுகளைச்
சகித்தோமானால் அவரோடு கூட ஆளுகையும் செய்வோம்."
– (2தீமோ 2:11,12).

தன்னுடைய சரீரத்தின் அங்கங்களான ஆசாரியர்களுக்கு கர்த்தர் அளித்த இந்த உன்னதமான மகிமையைக்காட்டிலும் வேறு எதுவுமில்லை.

திருச்சபையானது ஆசரிப்புக் கூடாரத்தின் படத்திலே, சித்திர விளக்கமாக காண்பிக்கப்பட்டிருக்கிறது என்று நாம் சொல்லியிருக்கிறோம். அதன்

அடையாளம் கூடாரத் திரையிலும் காணப்படுகிறது. ஆசரிப்புக் கூடாரத்தின் காட்சியில் அனைவரும் புரிந்துகொள்ள மிகவும் அவசியமான ஒன்று என்னவெனில், உலகின் பாவங்களுக்குப் பரிகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நம் கர்த்தர் செலுத்திய பலியானது ஒரு அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது என்பதாகும். வேதத்தைக் கற்பவர்கள் பொதுவாக இதனை ஒப்புக்கொள்வார்கள். அவர்களைக் குறித்து அப்.பேதுரு ஆசாரியர்கள் என்றழைத்து, திருச்சபையை ஆசரிப்புக்கூடாரக் காட்சியோடு தொடர்ப்புபடுத்துகின்றார் (1பேது 2:9). மேலும் அவர்கள் அபிஷேகம் பண்ணப்படுகிற அடையாளத்தினால் பிரதான ஆசாரியனின் சரீர அங்கங்கள் என அழைக்கப்படுகின்றார்கள்.

(சங் 133:2; 1கொரி 12:12; 13:27, எபேசி 5:29,30).

திருச்சபையானது கிறிஸ்துவுடனே கூட பாடுபடவும் பலியாகவும் அழைக்கப்பட்டிருப்பதாலே இயேசுவுடன் சேர்ந்து பிரியமான பலியாக ஒப்புக்கொடுக்கும் திருச்சபையின் உரிமையை, ஆசரிப்புக் கூடாரத்தின் காட்சி சித்தரிக்கின்றது என்று சொல்வது காரணகாரியத்திற்கேற்றதா? புதிய ஏற்பாடானது, அவரோடு கூடச் சேர்ந்து நாம் பலிபீடத்தில் நம்மையே பலியாக ஒப்புக்கொடுக்கும் உரிமையைப் பெற்றிருக்கிறோம் எனக் கூறுகிறது. உடன்படிக்கையின் அடையாளமான தண்ணீரில் முழுகும் ஞானஸ்நானத்தை அவருடைய மரணத்திற்குள்ளாகும் நமது ஞானஸ்நானம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் நமது மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தைப் பெறவில்லை. ஆனால் அவருடைய மரணத்திற்குள்ளாகும் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறோம் என்பதையே நாம் தெளிவாகப்புரிந்துகொள்ள வேண்டும். உலகத்திலிருந்து வேறுபட்டுள்ள திருச்சபையின் நம்பிக்கை இங்கு சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

> “கிறிஸ்து இயேசுவுக்குள்ளான ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்துமரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும்புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப் பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்”
> – ரோமர் 6:3-5.

பவுல் முன் சொல்லப்பட்ட வசனங்களில் நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம் என்ற உறுதியைத் தருகிறார் என்ற போதுலும், இந்த உறுதியினால் நாம் அலட்சியமாக இருந்து அதன் காரணமாக சத்தியத்திலிருந்து வழிவிலகிச் சென்றுவிடக்கூடாது. நாம் பாவமே அறியாத ஒருவரின் மரணத்தில் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோம். அவர் பாவத்திற்கு மரிக்காமல் பாவம் சுமத்தப்பட்டதனால் மரித்தார்.

## விளக்கத்திற்காக, மிகமுக்கியமான குறிப்புகளை மீண்டும் அறிவிக்கிறோம்

- திருச்சபையானது ஈடுபலியில் (Ransom) கிறிஸ்துவோடு பங்கெடுத்துக் கொள்கிறது. அல்லது அதற்கு உறுதுணையாயி ருக்கிறது என்று சொல்லப்படும் எந்த விளக்கமும் தவறானது.

- நாம் பூரணப்பட்டிருக்கவும் இந்த பூமியிலுள்ள, தேவ சித்தத்துக்கு கீழ்ப்படிபவர்களை அவர்களுடைய பூரணமான நிலைக்குக் கொண்டு வரும் உரிமையைப் பகிர்ந்து கொள்வது மான, இந்த இரண்டு காரணங்களுக்காக நம்முடைய பிரியமான பலிகளை கிறிஸ்துவின் பலியுடன் கூட, தேவன் இவ்விதமாய் ஏற்றுக் கொள்வார்.

- நீதிமானாகிய கிறிஸ்துவின் மரணம் அநீதியுள்ளவர்களுக்காக கொடுக்கப்பட்ட ஒரு தியாக பலியாகும்.

- திருச்சபை தமது தகுதியின்மூலம் மற்றவர்களது குறைவைப் போக்க முடியாது.

- சரீர அங்கங்கள் ஞானஸ்நானத்தின் மூலம் திருநிலைப்- படுத்தப்பட்டு பிரியமான பலிகளைத் தந்தபோதிலும், அப்பலிகள் மரித்தவர்களுக்கான ஈட்டுக்கிரயமாகிவிட்டாது. ஏனெனில் அனைவருக்கும் சேர்த்தே கிறிஸ்துவின் விலைக்கிரயம் செலுத்தப்பட்டது.

- மரித்தோரின் விடுதலைக்காக விலைக்கிரயம் செலுத்த திருச்சபையிடம் வறுமை ஏற்பட்டுள்ளது என்றும் தவறாக எண்ணிவிடக்கூடாது.

நமது கர்த்தர்,

"தாம் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்"
– எபி 5:8.

“ நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி கிறிஸ்துவே. நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்கிற பலியாயிருக்கிறார் ” – 1 யோவா 2:2.

மேற்கண்ட இரு வசனங்களும் நம் ஐயப்பாடுகளைத்தீர்க்குமென நம்புகிறோம். கிறிஸ்து திருச்சபையாரின் பொருட்டு தேவ சந்நிதியின் முன் தோன்றினார் என்று வேதாகமம் தெளிவாக உரைக்கின்றது. உலகத்தாருக்காக இவ்வாறு வீற்றிருக்கிறார் என்று எவ்விடத்திலும் சொல்லப்படவில்லை. அவ்வாறு அவர் உலகத்தாருக்காக தேவன்முன் தோற்றமளிக்கவில்லை என்ற போதனைகளைக் கடைப்பிடிக்கவும் நமக்கு வேத ஆதாரங்கள் உண்டு. கிறிஸ்து திருச்சபைக்காக தேவன்முன் தோன்றியபோது, வாக்களிக்கப்பட்ட பரிசுத்த ஆவி, காத்துக்கொண்டிருந்த சீடர்களுக்கு அருளப்பட்டது. இந்நிகழ்ச்சியின் வாயிலாக கிறிஸ்துவின் பலி ஏற்கப்பட்டுவிட்டது என்பது நிச்சயமாகிறது.

## ஒரே ஆவிக்குள்ளாக நாமனைவரும் ஞானஸ்நானம் பெற்றோம்

இயேசு தாம் மாம்சத்திலே உண்டாக்கப்படும் முன்னர், காளைகளின் இரத்தமும், ஆட்டுக்கடாக்களின் இரத்தமும், அவைகள் ஆயிரமாயிரமாகப் பலியிடப்பட்டாலும் கூட, அன்பின் பிதா திட்டம் பண்ணின மீட்பை அவைகள் நிறைவேற்றக் கூடாமல் போனது என்பதைக் கண்டார். லோகோஸாக இருந்த அவர், விழுந்துபோன மனுக்குலத்தின் மீது இரக்கப்பட்டு, தேவனின் விருப்பத்திற்கு இசைந்து, இரத்தம் சிந்தும் பலிகள் என்ன போதிக்க விரும்புகின்றன என்ற சத்தியத்தைப் பகுத்துணர்ந்து, பின்னர் தன்னையே மனமுவந்து அளிக்க முன்வந்தார். இயேசு தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்தார். அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

“ பலியையும் காணிக்கையையும் நீர் விரும்புவதில்லை. என்னுடைய செவியைத் திறந்தீர். சர்வாங்க தகன பலியையும், பாவ நிவாரண பலியையும் நீர் கேட்கவில்லை. (ஆயிரமாயிரம் ஆடு மாடுகள் வெட்டப்பட்டு இரத்தம் சிந்தினாலும் பாவத்தை நீக்க முடியவில்லை). இவைகளை நான் பார்த்தபோது, இதோ நான் வருகிறேன்” – சங் 40:6-7

இந்த தியாக உள்ளம் தான், விழுந்துபோன மனுக்குலத்திற்காக மரிக்க அவரை இவ்வுலகிற்குக் கொண்டு வந்தது.

“ எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ் நானம் பண்ணப்பட்டோம் ” – 1கொரி 12:13.

இந்த ஞானஸ்நானத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நம்முடைய உரிமையே ஒரே ஆவி, ஒரே உடல். இயேசுவின் பலியின் பயன்கள் நேரடியாக இதற்குப் பொருந்தாது. கிறிஸ்து தம் ஜீவ பலியின் மூலம் பெற்ற உரிமை சலுகைகள் மட்டும் தனித்து தம் ஜீவ பலியின் மூலம் பெற்ற உரிமை சலுகைகள் மட்டும் தனித்து யாதொன்றையும் செய்து முடிக்காது. வல்லமையின் மகத்துவங்கள் எல்லாம் தேவனுடையவைகள். எதிர்காலத்தில் திருச்சபையிடம் செய்து முடிக்கும்படி கடினமான பணிகள் ஒப்புக்கொடுக்கப்படும். அவைகளில் ஒன்று இந்த உலகை ஆசீர்வதிப்பதாகும். பின்னாளில் இத்திருச்சபையார் மூலம் பயனடைகின்ற உலகத்தார், திருச்சபையார் இம்மாமிச சரீரத்தில் பட்ட பாடுகளையும் நிந்தைகளையும் நினைவுகூர்ந்து நம்மைப் புகழ்வர் என எதிர்பார்க்கக்கூடாது. இந்த பூமியின் மண் பாண்ட சரீரங்கள் எப்போதும் பயன் தராத ஊழியர்களாகவே இருக்கும்.

நீதிமானாகிய ஆபேலின் இரத்தம் முதல் சகரியாவின் இரத்தம் வரை, பூமியிலே சிந்தப்பட்ட அனைத்து நீதிமான்களின் இரத்தப்பழியும் இந்தச் சந்ததியிடம் கேட்கப்படும் என்று நம்முடைய ஆண்டவர் முன்பே சொல்லியிருக்கிறார் (லூக் 11:50-51). இதிலிருந்து திருச்சபையின் பலியை அங்கீகரிப்பதற்கு தேவன் மேலும் சில காரணங்களை வைத்திருக்கிறார் என்பது தெரிகிறது. எருசலேம் அழிந்தபோது பயங்கரமாய்ப் படுகொலை செய்யப்பட்ட கைகளினால் எழுதப்பட்ட சட்டத்திலிருந்து அவர்களுக்கு விடுதலையளித்து, சிலுவைமரத்திலே தொங்கவிடப்பட்டவரின் மகிமையையும் அவர்களால் குறைக்க முடியவில்லை. மேலும் இன்னும் ஒரு கேள்வியைக் கேட்கிறோம். திருச்சபையின் பலிக்குப் பொருத்தமாக என்ன காரணம் வேதவாக்கியங்களின் படி கொடுக்கப்பட்டிருக்கிறது?

## பலிகள் பாளையத்திற்குப் புறம்பாக எரிக்கப்பட்டது

கிறிஸ்துவின் சரீர அங்கங்கள், அவரோடே கூடஎவ்வளவு நெருக்கமாக பலியின் ஜீவியத்தில் ஐக்கியப்பட்டிருந்தார்கள் என்பதை எண்ணிப்பாருங்கள். எந்த மிருகத்தினுடைய இரத்தம், பாவங்களின் நிமித்தமாக பரிசுத்தஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனாலே கொண்டு வரப்படுகிறதோ, அந்த மிருகங்களின் உடல்கள் பாளையத்துக்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட வேண்டும். அந்தப்படியே இயேசுவும்.

> “தம்முடைய சொந்த இரத்தத்தினாலே, ஜனத்தைப் பரிசுத்தஞ் செய்யும்படியாக, நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச்சுமந்து பாளையத்துக்குப் புறம்பே அவரிடத்துக்குப் புறப்பட்டு போகக் கடவோம்” - (எபி 13:11-13).

மறைபொருளும், இருளுமாயிருக்கின்ற சில காட்சிகளை அப்போஸ்தலர் இங்கு விளக்குகின்றார். பாளையத்துக்குப்புறம்பே சுட்டெரிக்கப்பட்ட சில மிருகங்களின் உடல்கள் பாவ நிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டதை இங்கு நமக்கு நினைவுபடுத்துகின்றார். இதுபோல இரண்டு பலிகள் மட்டுமே அப்படிச் செய்யப்பட்டுள்ளது. அடுத்து, இது யாரைக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டுள்ளது என அப்போஸ்தலர் விளக்கும்போது, இயேசுகிறிஸ்து நகர வாசலுக்குள் பிரவேசிக்காமல், புறம்பே துன்பங்களைச் சுமந்ததுபோல, நாமும் அவருடைய நிந்தைகளைச் சுமந்து பாளையத்துக்குப் புறம்பே அவரைப் பின் செல்வோம் என்கிறார்.

காளை, ஆடு ஆகியவை ஒப்புரவாக்குதலின் நாளுக்கென செய்யப்பட்ட நிழலான பலிமுறைகளுக்கே பொருந்தக் கூடியவை. (ஒப்பிட்டுப்பார்க்க லேவி 16ம் அதிகாரம்). ஆரோன் காளை மாட்டினை தனக்காகவும், தனது வீட்டாருக்காகவுமே ஒப்புக்கொடுத்தார். அதன்பொருளாக, கிறிஸ்து தனது சரீர அங்கங்களாகிய விசுவாச வீட்டாரோடு சேர்ந்து, தேவன் முன்னால் நமக்காகத் தோன்றினார். பிறகு ஆரோன் இஸ்ரயேல் மக்களிடமிருந்து ஒரு வெள்ளாட்டுக்குட்டியைத் தெரிந்தெடுத்து பலியாக ஒப்புக் கொடுத்தானது (5ம் வசனம்), உலகத்திலிருந்து திருச்சபையார் தெரிந்தெடுக்கப்படுவதைக் குறிக்கிறது. காளை மாட்டினைக் கொண்டு என்னென்ன செயல்கள் செய்யப்பட்டதோ, அவ்வாறே ஆட்டுக்குட்டியைக்கொண்டும் நிகழ்த்தப்பட்டது. அதன் இரத்தம் இஸ்ரயேல் ஜனங்களின் மீறுதலுக்கு நிவாரணமாக ஒப்புக்கொடுக்கப்பட்டது (16ம் வசனம்). இதன் பொருள் உலக ஜனங்களைக் குறிப்பதாக உள்ளது. காளையின் இரத்தமும், ஆட்டின் இரத்தமும் மனிதனது பாவத்தைப் போக்க இயலாதவை என்று நமது இரட்சகர் கண்டார்.

> “அந்தப்படியே இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகர வாசலுக்குப் புறம்பே பாடுபட்டார்” – எபி 13:12

அந்நாளில் காளைமாடு பலியிடப்பட்டு அதன் உடல் பாளையத்திற்குப்புறம்பே எரிக்கப்பட்டது. இது நமது கர்த்தர் மனப்பூர்வமாக தன்னையே மரணத்துக்கு ஒப்புவித்ததைக் குறிக்கிறது. மற்றுமொரு மிருகபலியானது அங்கே நடந்தேறியது. அந்த இரண்டாம் பலி காளை மாட்டின் பலியோடு ஒப்பிடுகையில் முக்கியத்துவமற்ற ஒன்றாகும். ஆனால் இதன் இரத்தமும் பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரதான ஆசாரியனால் பாவத்தினிமித்தமாகக் கொண்டுவரப்பட்டது (15ம் வசனம்). அதனுடைய உடல் பாளையத்திற்குப் புறம்பே சுட்டெரிக்கப்பட்டது (27ம் வசனம்). நமது

குருவைப்போலவே நாமும் ஆசரிப்புக்கூடாரத்தின் உண்மைப்பொருளைக் கற்றுுரை வேண்டும். அப்படி கற்கப் பிரியப்படுவோமேயானால், அவரோடு கூடப் பாளையத்திற்குப் புறம்பாக அவருடைய நிந்தையைச் சுமந்து செல்லக்கடவோம்.

## செலுத்தப்பட்ட இருவித இரத்தம்

அவருடைய நிந்தைகளைச் சுமந்து என்ற சொற்றொடரிலுள்ள இரு முக்கியக் குறிப்புகளை நாம் விட்டுவிடக்கூடாது என்று சிலர் சொல்லலாம். ஆனால் இரண்டு குறிப்புகளும் முக்கியமானதாகும். நாம் அவருடைய நிந்தைகளைச் சுமக்கவேண்டும். ஆனால் அது அவரோடு கூட பாளையத்துக்குப் புறம்பே செல்வதினாலேயே நிகழவேண்டும். காளையும் ஆடும் பாவத்திற்காகத்தான் பலியாகக் கொடுக்கப்பட்டது. ஆனாலும் இரண்டுமே பாவிகளில் தண்டனையை நீக்கப்போதுமானதாக இல்லை. நிழலான காளையின் பொருளாயிருந்த ஒருவரின் மரணத்தினாலேயே அது நிறைவேறியது.

தேவ வல்லமையினால் இரண்டு பலிகளுக்குமே பொருந்தும்படி ஒரு வாக்கியம் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளது. அது இரண்டுமே பாவத்தினை வலியுறுத்தவே உபயோகிக்கப்பட்டுள்ளது. முதலாவது நமக்காகக் கொடுக்கப்பட்டுள்ள விலைக் கிரயத்தைக் குறிக்கிறதாயிருக்கிறது. இரண்டாவது, முதல் பலியின் நன்மைகளை உலகமனைத்திற்கும் கொண்டு வருவதில் திருச்சபையின் பங்கைக் காண்பிக்கிறதாய் இருக்கிறது.

ஒருவேளை கல்வாரியில் செலுத்தப்பட்ட தியாக பலியினால் கிடைத்த தகுதிகள் திருச்சபையார் மீது பொழியப்படாமலிருந்தால், திருச்சபையார் எந்த ஒரு நன்மையும் பெற்றிருக்க வாய்ப்பில்லை. அல்லது தேவ கிருபையினால் கிறிஸ்துவின் தியாகபலியின் நன்மைகள் திருச்சபையாருக்கு அருளப்படாதிருந்தால், நாம் மறுரூபமாகி கிறிஸ்துவின் சாயலைப்பெற வாய்ப்பில்லாமல் போயிருக்கும். இதுபோலவே உலகமாந்தர்க்கும், அந்த பலியினால் கிடைத்த நன்மைகள் பகிர்ந்தளிக்கப்படவேண்டியதாயுள்ளன. இவ்வாறாகக் கொடுக்கப்பட்ட புதிய ஜீவனுக்கான ஆசீர்வாதங்கள், உலகத்தாருக்கும் நிரந்தரமாய் கொடுக்கப்பட வழிவகைகள் தேவ திட்டத்தில் உண்டு.

தேவ ஆட்டுக்குட்டி என்பது திருச்சபையைக் குறிக்கிறது என்பதை ஒப்புக்கொள்ள அநேகர் மறுக்கின்றனர். ஆட்டுக்குட்டியின் இரத்தமானது, பிரதான ஆசாரியனாலே ஆசரிப்புக் கூடாரத்திற்குள் கொண்டு வரப்பட்டது

என்பதை இது நமக்கு நினைவுபடுத்துகிறது. ஒப்புக்கொடுக்க ஒன்றுமேயில்லாத திருச்சபையை இது குறிக்குமா? என்ற கேள்வியை அவர்கள் கேட்கிறார்கள்.

கிறிஸ்துவின் பலன்கள் திருச்சபையின் மீது பொழியப்படும்போது உண்மையாகவே ஒப்புக்கொடுக்க பிரியமான பலிகள் அதனிடம் உள்ளன. இந்தக் குறிப்பானது, உண்மையான ஆசரிப்புக்கூடார ஒழுங்குகளில், முன்னடையாளமாகக் காண்பிக்கப்படவில்லை. என்றாலும் இந்த காட்சியின் விளக்கம் உண்மையாகும். இந்த வார்த்தைகளைச் சொல்லர்த்தமாக எடுத்துக்காட்ட இயலாது என்று மீண்டும் சொல்கின்றோம்.

ஆசரிப்புக்கூடாரத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் பின்வரும் விளக்கத்தைத் தருகிறது. மீறுதல்களினாலும், பாவத்தினாலும் மரித்த நம்மைக் குறிப்பதற்காக, இறந்துபோன ஒரு ஆடு நிழலாகச் சொல்லப்பட்டுள்ளது. அதன் பின்பு அந்த ஆட்டுக்குட்டி உயிர் பெறுவதற்கு காளையின் இரத்தம் அதற்குச் செலுத்தப்படவேண்டிய அவசியம் ஏற்பட்டது. காண்பிக்க இயலாத இந்த (உண்மையை) சத்தியத்தைப் புரிந்துகொண்டால், இந்தக் காட்சி மிக எளிமையானதாகவும் தெளிவானதாகவும் விளங்கும்.

ஜனங்களின் பாவ நிவர்த்திக்காகச் செலுத்தப்பட்ட முன்னடையாளமான ஆட்டின் இரத்தமானது, பிரதான ஆசாரியனாலே, திரைக்குள்ளாகத் தெளிக்கப்பட்டபோது, நம்முடைய இரட்சகர் அவருடைய மகிமையைக் கொள்ளையாடிக் கொண்டார் என்று யாரும் குறைசொல்ல முடியாது. செலுத்தப்பட்ட எல்லா இரத்தமும் அவருக்குரியது.

> "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. நம்முடைய பாவங்களை மாத்திரம் அல்ல. சர்வ உலகின் பாவங்களையும் நீக்குகிற பலியாயிருக்கிறார்" – 1யோவா 2:2.

எவ்விதத்திலும் தன் சகோதரனை மீட்டுக்கொள்ளவும் மீட்கும்பொருளை தேவனுக்குக் கொடுக்கவும் கூடாதே. அவர்கள் ஆத்தும மீட்பு மிகவும் விலையேறப்பெற்றதாய் இருக்கிறது. (எபிரேய மொழியில் யாகர் என்பதற்கு விலையேறப்பெற்றது என்று பொருள்தரக்கூடிய ஈட்டுக்கிரயம் தேவையாயிருக்கிறது).

இரத்தம் ஜீவனைக் குறிக்கிறது (ஆதி 9:4) திருச்சபை பெற்றிருக்கிற ஒரே ஜீவன் அதன்மேல் ஊற்றப்பட்டதாகும். ஆகவே அவருடைய கைகளில் பெற்றுக் கொண்டதையே திருச்சபை பலிபீடத்திலே காணிக்கையாகக் கொடுக்கிறது. இதை மனதில் கொண்டு பரிசுத்தவான்களின் மரணம் தேவனுடைய

பார்வையிலே மிகவும் கொண்டு பரிசுத்தவான்களின் மரணம் தேவனுடைய பார்வையிலே மிகவும் அருமையாயிருக்கிறது (சங் 116:15) என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொள்ளலாம். யாகர் என்ற எபிரேய வார்த்தையின் சரியான அர்த்தத்தைக் கொண்டு இவ்வாறு வாசிக்கலாம். பரிசுத்தவான்களின் மரணமானது தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப் பெற்றதாயிருக்கிறது. இந்த உலகம் அவைகளை அறியவில்லை. ஆனால் தேவ பார்வையில் இந்த உலகம் அவைகளை அறியவில்லை. ஆனால் தேவ பார்வையில் இந்தச் சிறியவர்களின் மரணம் ஒரு ஆட்டைப் போல மிக எளியதாகவும் விலையேறப்பெற்றதாகவும் இருக்கின்றது.

அவருடைய அன்பின் பொக்கிஷமும் ஒரேபேறான குமாரனுமானவரின் ஜீவனும் இரத்தமும் இந்தமுறை பலியாகக் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தது. அது சரீர அங்கங்களும், விசுவாச வீட்டாராருமாகிய நமக்காக மட்டும் கொடுக்கப்படவில்லை முழு உலகத்தாரின் பாவங்களுக்காகவும் சேர்த்துக் கொடுக்கப்பட்டது. தேவனுக்குப் பிரியமான ஏற்கத் தகுந்த பலி, பூமிக்குரிய மண்பாண்டத்தின் வழியாகச் செலுத்தப்பட வேண்டியதாய் உள்ளது.

## கிறிஸ்துவின் உடன் பங்காளிகள்

கிறிஸ்துவின் இரத்தம் அசுத்தமானதோ, எல்லருக்கும் பொதுவானதோ அல்ல. இதனை அசுத்தம் என்று எண்ணுபவன், தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதிக்கிறான் எபி 10:29. இது திருச்சபையின் அங்கங்கள் ஒவ்வொருவரையும் பரிசுத்தஞ் செய்த உடன்படிக்கையின் இரத்தம். கிறிஸ்து சிந்திய இரத்தத்தினால் கிடைத்த பரிபூரணத்தினால் திருச்சபையும் பரிபூரணமாக்கப்படுகிறது. நாம் உடன்படிக்கையின் பாத்திரத்திலே பங்குபெறுவது, கிறிஸ்துவின் இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறது என அப்போஸ்தலர் பவுல் கூறுகிறார் – 1கொரி 10:16

அசுத்தமான என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள பெயர் உரிச்சொல், ஒரு பொருள் பங்கிடப்படுவதைப்போல, பொதுவான என்ற அர்த்தமும் உபயோகத்தில் உள்ளது. திருச்சபையானது ஐக்கியத்தின் பாத்திரத்தில் பங்கெடுத்துக் கொள்வதை, மிகக் கடினமான தாண்ட இயலாத ஒரு தடை எனச் சிலர் எண்ணுகின்றனர்.

ஒரு சிலர் ஐக்கியம் என்று 1கொரி 10:16ல் குறிப்பிடப்பட்ட சொல்லை உரிச்சொல் வடிவில் தவறாகப் புரிந்துகொண்டுள்ளனர். இந்தப் பாத்திரத்தில் பங்கு பெறும் உரிமையைப் பற்றி உயர்வாய்ப் பேச பவுல் நம்மை

வலியுறுத்துகிறார். இதற்கு முந்தின வசனங்களில், ஐக்கியத்தைப் பற்றி கூறும்போது, நாம் பெற்ற இந்த ஆசீர்வாதம் சாதாரணமாக மதிப்பிடக் கூடியதல்ல. மாம்சத்தின்படியான இஸ்ரயேலர்களைப் பாருங்கள், பலிகளைப் புசிக்கிறவர்கள் பலிபீடத்தோட ஐக்கியமாய் இருக்கிறார்களல்லவா –1கொரி 10:18. ஐக்கியம் என்ற சொல்லுக்கு "ஒன்றுசேர்ந்து பங்கெடுத்துக் கொள்பவர்கள்" என்று தாயர் கிரேக்கச் சொல்லகராதியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

மற்றொரு ஆட்சேபணையும் எழுப்பப்படுகிறது. எபிரேயருக்கு எழுதின நிருபத்தில், பிரதான ஆசாரியன், வருடத்தில் ஒரே ஒருமுறை மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் இரத்தத்தை எடுத்துக் கொண்டு செல்வதாகச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சிலர் கூறலாம் (எபி 9:6-7, 24-28). இந்தவிதமான ஆட்சேபணை அடிப்படையில்லாத ஒன்று என நாம் காண்கிறோம். அந்தப் பிரதான ஆசாரியன் உண்மையாக, மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் அதே நாளில், காளையின் இரத்தத்தைத் தெளிப்பதற்காகவும், அதன் பின்னர் ஆட்டின் இரத்தத்துடனும் இரண்டு தடவை உட்பிரவேசிக்கிறார் (லேவி 16:14; 15:34). இந்த இரண்டு இரத்தமும் தெளிக்கப்படுவதற்கு இடைப்பட்டநேரம் அந்த ஆட்டைப் பலியிடும் நேரம்தான். வருடத்திற்கு ஒரு முறை அனுசரிக்கும் ஒப்புரவாக்குதலின் நாளில் நடைபெறும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரே நிகழ்ச்சியாக, இந்நூலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார் – லேவி 16:34. நம்முடைய ஜீவனும், பாடுகளும் , கிறிஸ்துவின் அனுபவங்களோடு பின்னிப் பிணைந்திருப்பதில் உள்ள நெருக்கத்தை இது எடுத்துக் காட்டுகிறது. புதிய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியிருக்கிறபடி, நாம் அவருடைய நோக்கத்தின்படி அனைவரும் ஒன்றாயிருக்கிறோம்.

> "ஆதலால் பரலோகத்திலுள்ளவைகளுக்குச் சாயலானவைகள் இப்படிப்பட்ட பலிகளினாலே, சுத்திகரிக்கப்பட வேண்டிய– தாயிருந்தது. பரலோகத்திலுள்ளவைகளோ, இவைகளிலும் விசேஷித்த பலிகளினாலே சுத்திகரிக்கப்பட வேண்டியதாமே" – எபி 9:23.

இந்தப் பலிகளில் முதலாவதுதான் இன்னமும் ஒப்புக்கொடுக்கப்பட்டு வருகிறது. எபிரேயர் 9:12ஐ வாசிக்கும்போது புரிந்துகொள்ள கடினமாயிருக்கிறது என்று கூறுபவர்கள் நாம் நித்திய மீட்பை அடைந்த பிறகே இக்காரியங்களெல்லாம் நடைபெறப்போகிறது என்பதை நினைவில் வைத்துக்கொண்டால் அதற்கான அர்த்தம் எளிதில் விளங்கும், ஆகவே தேவ திட்டத்தில் உலகோரின் பாவக்கறைகளை நீக்குவது இப்பொழுதோ அல்லது சிறிது காலத்திற்குள்ளோ நடைபெறப்போகிற காரியமல்ல. நித்திய மீட்பைப் பெற்றுக்கொண்ட பின் (இன்னமும் அது எல்லாருக்கும் பொருந்தா விட்டாலும் கூட) இயேசு அனைவருக்கும் ஆண்டவராக வானத்திலும் பூமியிலும் எல்லா அதிகாரமும்

அவருக்குக் கொடுக்கப்பட்டது - மத் 28-18. ஆம். மரணம் மற்றும் பாதாளத்தின் திறவுகோல்களும் (வெளி 1:18) அவருடையதாயிற்று. அவருடன் ஒன்றாக, ஒருவரோடொருவர் கொண்டிருக்கும் ஐக்கியத்தினாலே அபிஷேகம் பண்ணப்பட்ட கூட்டத்தினர் கிறிஸ்து (கலா 3:16-29) இயேசுவின் ஈடுப்லியினாலே வந்த நன்மைகளைக் கொடுத்து இந்த பூமியின் வம்சங்களை எல்லாம் ஆசீர்வதிப்பார்கள்.

கிறிஸ்துவின்பாடுகள், அவருடைய மரணத்தோடே முடிவடைந்து விடவில்லை என்கிற நம்முடைய ஆதாரத்திற்கு அப்போஸ்தலனாகிய பேதுரு, இன்னும் அதிக ஆதாரங்களைச் சேர்க்கிறார். 30 ஆண்டுகளுக்குப்பிறகு அவர் எழுதும்போது...

> "கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும்...அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது இன்ன காலத்தை குறித்தாரென்பதையும், தங்கள் நிமித்தமாக அல்ல, நமது நிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்கள்" - 1பேது 1:11

இதற்குப் பின்வரும் காரியங்களை எல்லாம் தேவ தூதர்களும் உற்றுப்பார்க்க ஆசையாயிருக்கிறார்கள் என்று சொல்கிறார் (12 ம் வசனம்). இயேசு ஏற்கனவே பாடுபட்டு மரித்துவிட்டபோதிலும் தூதர்களோ முன்னடையாளமான ஒப்புரவாக்கும் நாளின் பணி மட்டுமே தொடங்கியிருப்பதாக அறிந்திருந்தனர். மறுபடியும் நம்முடைய ஆண்டவர் உயிர்த்தெழுந்து சென்று நீண்ட நாட்களுக்குப் பின் சவுலிடம் கூறிய வார்த்தைகள் -

"நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே" - அப் 9:5

என்பதாகும். அதாவது, அவரைப் பின்பற்றுகிறவர்களின் பாடுகள் அபிஷேகம் பண்ணப்பட்டவராகிய கிறிஸ்துவின் பாடுகளாக காண்பிக்கப்பட்டது. இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் (இயற்கையான உடல்) ஒரே தடவை பலியிடப்பட்டதினாலே, அந்த சித்தத்தின்படி, நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக்கிறோம் (எபி 10:10). ஆகவே உங்கள் சரீரங்கள் கிறிஸ்துவின் அவயங்கள் என்று அறியீர்களா? (1கொரி 6:15).

கிறிஸ்துவின் பாடுகளில் பங்கெடுத்துக் கொள்கின்ற அழைப்பை யாரெல்லாம் ஏற்றுக்கொண்டார்களோ, அவர்கள் பவுல் கூறிய வார்த்தைகளின் தாக்கங்களையும் ஏற்றுக்கொள்வார்கள். தன்னையே உதாரணமாகக் காண்பித்து அவர் எழுதும்போது,

> " இப்பொழுது நான் உங்கள் நிமித்தம் அநுபவிக்கிற பாடுகளில்

சந்தோஷமடைந்து, கிறிஸ்துவினுடைய உபத்திரவங்களில் குறைவானதை அவருடைய சரீரமாகிய சபைக்காக என் மாம்சத்திலே நிறைவேற்றுகிறேன். ஆதிகாலங்களுக்கும் தலைமுறை தலைமுறைகளுக்கும் மறைவாயிருந்து இப்பொழுது அவருடைய பரிசுத்தவான்களுக்கு வெளியாக்கப்பட்ட இரகசியமாகிய தேவ வசனத்தைப் பூரணமாய்த் தெரியப்படுத்துவதற்கு உங்கள் பொருட்டு, தேவனால் எனக்கு அளிக்கப்பட்ட உத்தியோகத்தின்படியே நான் அந்த சபைக்கு ஊழியக்காரனானேன். புறஜாதிகளுக்குள்ளே விளங்கிய இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியும் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்கு வெளிப்படுத்தச் சித்தமானார். கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேறினவனாக நிறுத்தும்படி அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்தி சொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்"
–கொலோ 1:24-28.

இதுதான், மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் எடுப்பவர்களுக்குக் கிடைக்கும் பலன். அவர்கள் மரித்தவர்களுக்கான அபராதத்தைப் போக்கும் விலையைக் கொடுக்க முடியாது. ஆனால் அவர்கள் இயேசுவின் தியாக பலிகளினாலே உண்டான பலன்கள் மரித்தவர்களைச் சென்றடையும் ஒரு கருவியாக இருப்பார்கள். அவரோடு கூட பாடுகளைச் சகிப்பதை உள்ளடக்கிய, அவருடைய மரணத்திற்குள்ளாகும் திருச்சபையின் ஞானஸ்நானமானது, அவருடைய மரணம் வரை வழி நடத்திச் செல்கிறதைப் போன்ற அனுபவங்களைச் சகிக்கிறதாயிருக்கிறது. மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால்...இந்த பாடுகள் எல்லாம் பயனற்றதாகிவிடும் (1கொரி 15:16). உயிர்த்தெழுதல் இல்லாவிடில் திருச்சபையானது அதற்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட பரிபூரணத்திற்கு எழுந்திருக்க முடியாது. மற்ற மனுக்குல மாந்தரையும் மனிதர்களின் பூரண நிலைக்கு உயர்த்து முடியாது.

"கிறிஸ்துவின் மகிமை வெளிப்படும்போது, நீங்கள் மகிழ்ந்து களிகூறும்படி, அவருடைய பாடுகளுக்குப் பங்காளிகளானதால் சந்தோஷப்படுங்கள்" –1பேது 4:13.

ஆசீர்வதிக்கப்பட்ட எனது இரட்சகர் மரித்த
ஆச்சரியமான சிலுவையை நான்
ஆராய்ந்து பார்த்த போது,
இவ்வுலகின் லாபமெல்லாம்
அற்பமும் குப்பையுமாய் எண்ணினேன்
ஓ! இதன் பகட்டும் பெருமையும் வெறுமையே.

அன்பின் ஆண்டவரே நான் என்னுடையவனல்ல
நான் பெற்றிருக்கிற திறமை அதிகாரம்,
உரிமை–யாவும் உமக்குரியவைகள்
உம்முடைய புகழ் இனிய கீதங்களாய்
உயர்த்தப்படுவதே
எனது ஊழியத்தின் பாக்கியமாகக் காண்கிறேன்

உம்முடைய பலிகளின் அருகே, எளிமையான
என்னுடைய கிரியகளைப் படைக்கின்றேன்
நலிந்தவனும், ஏழையும், என் பாவத்திற்காக
அறிக்கை செய்யவேண்டியவனுமாகிய நான்
படைத்தவை சிறியதாயிராது என நம்புகிறேன்.
உமக்கு செலுத்தின என் நன்றியறிதலான
காணிக்கையை நீர் ஏற்றுக்கொண்டீர் என்பதை
பின்னர் அறிந்துகொள்வேன்.
உமக்காகவே ஆண்டவரே!
உம்மேல் வைத்த அன்பு அதை முழுமையாக்கியது
அன்பென்ற அந்நறுமணம் உமக்கு இனிமையானது.